மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19ம் நாள் செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண். 05/2024
இன்
அசல் வழக்கு எண்.22/2023
-------

காளியம்மாள் .. மனுதாரர்/பிரதிவாதி

/எதிர் /

குருசாமி ..எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 04.08.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஜெகதீஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கணபதிராமன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையை ஏற்றுக்கொள்ள உத்தரவிட பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையில் 13.08.2002ம் ஆண்டு எழுதிக்கொடுத்த ஆவண எண்.2367/2002 ஷை தானபத்திரம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்ற பரிகாரம் ஆவண எண்.2367/2002 கொண்ட தானபத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருப்பதை ரத்து செய்ய வேண்டப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. வாதி, பிரதிவாதி பெயரில் நிரந்தர தடை உத்தரவு வழங்க கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஷை வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஷை எதிர்வழக்குரையில் கூடுதல் ஆவணங்கள் விபரங்கள் கிடைக்கும்பட்சத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்னுரிமையை ரிசர்வ் செய்திருக்கிறார். உண்மையில், வழக்கிடை சொத்து மனுதாரரது தந்தை நாராயணன் பெயருக்கு இலவச பட்டா எண்.350 அரசு வழங்கியுள்ளது. இன்று வரை பட்டா எண்.350 மனுதாரரது தந்தை நாராயணன் பெயரில் ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது என்பதை வாதி தெரிந்து கொண்டு அரசு அலுவலர் வருவாய் வட்டாட்சியாளரை இவ்வழக்கில் வாதி சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**2.2.** பிரதிவாதி மேற்படி வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை கேட்டு தாக்கல் செய்திருக்கின்றார். ஷை கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டியது இருக்கிறது. அப்படி இல்லாவிடில் மனுதாருக்கு ஏராளமான கஷ்டம் ஏற்படும். எனவே மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டி இந்த மனு தாக்கல்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் –</u>**

**3.1.** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்கீழ் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். அசல் வழக்கில் வாதி பக்கம் சாட்சியானது 11.12.2023 ம் தேதி முதல் விசாரணை முடிக்கப்பட்டு 05.01.2024 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 10.01.2024 ம் தேதி பி.வா.சா.1–ம் 12.02.2024 ம் தேதி

பி.வா.சா.2–ம், 14.02.2024ம் தேதி பி.வா.சா.3–ம் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்கோருரிமையுடன் கூடிய எதிர்வழக்குரை தற்போது தாக்கல் செய்வதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஷை எதிர்கோருரிமையுடன் கூடிய எதிர்வழக்குரையை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கான முறையான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் அசல் வழக்கில் சாட்சி விசாரணை முடிந்தபின்பு காலதாமதமாக எதிர்கோருரிமை கேட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு சட்டப்படி உரிமையில்லை. மனுதாரர் அசல் வழக்கில் விசாரணையை முடித்து இறுதி முடிவு எடுக்கவிடாமல் காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் எவ்வித முகாந்திரமுமின்றி சட்டவழிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் நீதிமன்ற நடவடிக்கைகளையும் சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். சாட்சி விசாரணை ஆரம்பித்த பின்னர் எதிர்பாத்திய கோரிக்கைகளை சட்டப்படி முன் வைக்க முடியாது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது வாதி, பிரதிவாதியின் பேரில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம்

என்னவென்றால், கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அப்படி ஏற்காவிடில் மனுதாரருக்கு ஏராளமான கஷ்டம் ஏற்படும் என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் எவ்வித முகாந்திரமுமின்றி சட்டவழிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் நீதிமன்ற நடவடிக்கைகளையும் சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**6.3.** வழக்கு ஆவணங்களை பரிசீலித்து பார்த்ததில் எதிர்கோருரிமையை பொறுத்து நீதிமன்றம் எந்த நிலையில் அதை அனுமதிக்க வேண்டும் என்பதற்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

Ashokumar kaira

Vs.

Wing Cdr. Surrendra Agnihotri & Others

என்ற வழக்கில் பல்வேறு காரணங்களை எடுத்துரைத்துள்ளது. அதில் எதிர்கோருரிமை காலதாமதமாக தாக்கல் செய்யும்போது அதற்குரிய காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டுமென்றும், பிரதிவாதி தனது உரிமையை மறுபரிசீலனை அல்லது உரிமையை வலியுறுத்த வேண்டி இருக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளது. மேற்கண்ட இரு காரணங்களை பரிசீலித்துப் பார்த்ததில் இம்மனுவை பொறுத்து பிரதிவாதி தரப்பில் இந்த எதிர்கோருரிமை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை குறித்து காரணங்கள் எதுவும் தெளிவுபட கூறவில்லை. மேலும் தனது உரிமையை வலியுறுத்தவோ அல்லது மறுபரிசீலனை செய்யவோ அதற்குரிய காரணங்களை நீதிமன்றத்திற்கு விவரித்து எடுத்துரைக்க வில்லை. மேலும் அசல் வழக்கில் வாதி பக்கம் சாட்சியானது 11.12.2023 ம் தேதி

முதல் விசாரணை முடிக்கப்பட்டு 05.01.2024 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 10.01.2024 ம் தேதி பி.வா.சா.1 ம், 12.02.2024 ம் தேதி பி.வா.சா.2 ம், 14.02.2024 ம் தேதி பி.வா.சா.3 ம் விசாரிக்கப்பட்டுள்ளது.

**6.4.** வழக்கானது 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், பிரதிவாதி கோரியுள்ள எதிர்கோருரிமை ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இது வழக்கை காலதாமதப்படுத்தும் என்றும், மேலும் விரைவான தீர்ப்பு வழங்குவதற்கு பாதகமாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட காரணங்களால் இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை

**எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண். 05/2024
இன்
அ.வ.எண்.22/2023
**உத்தரவு**
நாள் - 19.08.2025.